# சித்திர ஓவிய விண்ணப்பம்

தஜெகி அபோதா என்பவர் யப்பான் நாட்டைச் சேர்ந்த ஓவியக் கலைஞர் ஆவர். சிற்பங்கள் அமைப்பதில் அவர் திறமை வாய்ந்தவர். ஆவர் தமது வாழ்வின் ஒளியாக விளங்கிய மனைவியை அன்புடன் கவனித்தார் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

ஒருமுறை அபோதாவின் மனைவிக்கு கடுமையான கண் நோய் ஏற்பட்டது. மிகவும் வேதனையுடன் வாழ்ந்து வந்தார். கண்பார்வையில் கோளாறு ஏற்படலாம் என மருத்துவர் கூறினர்.

இது அபோதாவுக்கு புதிராக இருந்தது. அவர் மரப்பலகை ஒன்றை செதுக்க ஆரம்பித்தார்.



மேழே காணப்படும் உருவச்சிலையை செதுக்குவதில் அவனுக்கு எதுவித சிரமமும் இருக்கவில்லை. வார்த்தைகளால் விளக்க முடியாத அளவுக்கு அவன் உள்ளத்தால் கடவுளை நினைத்திருந்தான். தனது அன்பு மனைவிக்கு கண்பார்வை கிடைக்கவேண்டும் என அமைதியாகக் கடவுளிடம் வேண்டுதல் செய்தான்.

கிறிஸ்தவ கலைஞர்கள் தமது படைப்புக்களை வேண்டுதல் விண்ணப்பங்களாக முன்வைக்கின்றனர். தமது உணவு உறக்கம் போன்றவற்றை மறந்தவர்களாய் தமது ஓவிய பணிகளில் ஈடுபடுகின்றனர். ஆலயங்களில் காணப்படும் ஓவியங்கள் கூட விண்ணப்பங்களை புதுமையான முறைகளில் எடுத்துக் காட்டுகின்றனவாக அமைகின்றன.

ஆலய கட்டிடங்களை அமைக்கும்போது அதனூடாக கடவுளின் மகிமையை வெளிக்காட்டும் முகமாகவே கிறிஸ்தவ கலைஞர்களும் முயற்சித்துள்ளனர். அமைதியான வேண்டுதல்களாகவே அவைகளும் அமைகின்றன.

எமது பல்வேறு ஆற்றல்களைப் பாவித்து உள்ளத்தால் விண்ணப்பங்களை ஏறெடுத்தல் கடவுள் மிகவும் விரும்பும் ஒன்றாகும். எமது வேண்டுதல்களைப் போன்றே நன்றி துதி செலுத்துவற்கும் அவ்வகையான அமைப்புக்கள் வார்த்தைகளை விட பலம் நிறைந்தனவாகும்.

## செயற்பாடு

சமாதான உலகம் உருவாக வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் விண்ணப்பம் ஒன்றினை படம் மூலம் காட்டுக.